**<u>இது கர்த்தர் உண்டுபண்ணின நாள்; இதிலே களிகூர்ந்து மகிழக்கடவோம்.</u>**
**<u>This *is* the day the LORD has made; We will rejoice and be glad in it.</u>**

Praise the Lord: Let us pray. ..

இது கர்த்தர் உண்டுபண்ணின நாள்; இதிலே களிகூர்ந்து மகிழக்கடவோம். (சங் 118:24)
This *is* the day the LORD has made; We will rejoice and be glad in it.

இந்த மகிழ்ச்சி ஒவ்வொரு நாளும் நமக்கு இருக்க, சமாதானத்தின் தேவன் நம்மோடு இருக்கிறார். ஆமென்.
இப்படிப்பட்ட தெய்வீக சமாதானத்தை அடையவே அனைத்து மக்களும் பிரயாசப்படுகிறார்கள்.
இந்த சமாதானத்தைப் பற்றிய, ஆண்டவரின் வார்த்தைகளை வாசித்து தியானித்து,
மேலும் களிகூர்ந்து மகிழக்கடவோம்.

To rejoice and be glad every day, the God of peace is with us. Amen.
In this world, most of the People try to do something to receive this peace of God.
Let us read few words of God, to understand How God wants to give this peace to everyone.

*<u>(1). righteousness and peace and joy in the Holy Spirit.</u>*

**<u>1 பேதுரு/1 Peter 1:8-9</u>** (பக்கம் 317)

கிறிஸ்துவை நீங்கள் காணாமலிருந்தும் அவரிடத்தில் அன்புகூருகிறீர்கள்; இப்பொழுது அவரைத் தரிசியாமலிருந்தும் அவரிடத்தில் விசுவாசம் வைத்து, **<u>சொல்லிமுடியாததும்</u>** <u>மகிமையால் நிறைந்ததுமாயிருக்கிற</u> **<u>சந்தோஷமுள்ளவர்களாய்</u>** களிகூர்ந்து,
உங்கள் விசுவாசத்தின் பலனாகிய ஆத்துமரட்சிப்பை **<u>அடைகிறீர்கள்.</u>**

Whom having not seen, ye love; in whom, though now ye see him not, yet believing, ye rejoice with joy unspeakable and full of glory:
**<u>Receiving</u>** the end of your faith, even the salvation of your souls.

> இப்படிப்பட்ட சந்தோஷத்தை அருளிய நமது ஆண்டவருக்கு, விசேஷமாக நன்றி சொல்வோம்.
> இந்த சந்தோஷத்தை, நாம் தேவனுடைய நீதியினாலும் தேவசமாதானத்தினாலும் பெற்றுவருகிறோம்.
> Let us thank our God for giving this greatest Joy. (P*lease note the word …"Receiving…".)*
> We get this joy through Righteousness by God and His peace.

**<u>ரோமர்/Romans 4:25-5:1</u>** (பக்கம் 212)

கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டும், நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கிறார்.
இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே **<u>நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால்</u>**, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துமூலமாய் தேவனிடத்தில் **<u>சமாதானம்</u>** பெற்றிருக்கிறோம்.

Who was delivered for our offences, and was raised again for our justification.
Therefore being justified by faith, we have peace with God through our Lord Jesus Christ:

> நம்முடைய செய்கைகளாலே, நாம் நீதிமான்களாக்கப்படுவது கூடாத காரியம். இது நமக்குத் தெரிந்ததே.
> தேவன் ஒருவராலேதான் நாம் நீதிமான்களாகிறோம் என்பதை இந்த வசனம் தெளிவாக கூறுகிறது.
> We can not be justified for righteousness by our action. We know that very well.
> Righteousness can be possible ONLY by God. This verse explain this fact clearly.

**<u>ரோமர்/Romans 14:17</u>** (பக்கம் 223)

தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, <u>அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது.</u>

for the kingdom of God is not eating and drinking, but <u>righteousness and peace and joy in the Holy Spirit.</u>

> கர்த்தர் இப்படிப்பட்ட சந்தோஷத்தை நமக்குக் கொடுத்துவருகிறதுதான் நமக்குக் கிடைத்துள்ள பெரிய ஈவு.
> பிறந்தநாளை கொண்டாடும்….. அனைவரும் இந்த சந்தோஷத்தை **<u>அதிக அதிகமாக பெற்றுக்கொள்ள</u>**
> நாம் அவர்களை வாழ்த்துகிறோம். ஆமென்.
> This is the greatest gift for us from God.
> We all should pray specially for those who celebrated Birthday this month, to get this joy more and more.

*(2.) More closer to our Lord…..more joy we get….*

**சங்கீதம் / Psalm 36:7** (பக்கம் 691)

தேவனே, உம்முடைய கிருபை எவ்வளவு அருமையானது! அதினால் மனுபுத்திரர் உமது செட்டைகளின் **நிழலிலே வந்தடைகிறார்கள்**.

How excellent is thy lovingkindness, O God! therefore the children of men put their **trust** under the shadow of thy wings. (KJV)

How priceless is your unfailing love! Both high and low among men find **refuge** in the shadow of your wings. (NIV)

How precious, O God, is your constant love! We find **protection** under the shadow of your wings. (GNB)

**லூக்கா / Luke 1:35** (பக்கம் 77)

தேவதூதன் அவளுக்குப் பிரதியுத்தரமாக: பரிசுத்தஆவி உன்மேல் வரும்; **உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்;** ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்.

The angel answered, "The Holy Spirit will come upon you, and the power of the Most High will overshadow you. So the holy one to be born will be called[a] the Son of God.

தேவனுடைய நிழலே வந்தடைந்து பலத்தைப் பெற்றுக்கொள்வதைவிட சிறந்தது,
தேவனே நம்மோடு தங்கி நம்மை பெலப்படுத்துவது.
இந்த வித்தியாசத்தை உணர்ந்து மேலும் கர்த்தருக்குள் களிகூருங்கள்.

People stay under the presence of God and get power one thing….
But the presence of God stay with people and give power is the BEST thing.
Think about the different and enjoy in the Lord presence.

*(3) World has limit. God has NO limit.*

**சங்கீதம்/Psalm 119:96** (பக்கம் 748)

சகல சம்பூரணத்திற்கும் எல்லையைக் கண்டேன்: உம்முடைய கற்பனையோ மகா விஸ்தாரம்.

To all perfection I see a limit, but your commands are boundless. (NIV)

I have seen the consummation of all perfection, *But* Your commandment *is* exceedingly broad.

Even perfection has its limits, but your commands have no limit. (NLT)

**I have seen that everything [human] has its limits and end [no matter how extensive, noble, and excellent]; but Your commandment is exceedingly broad and extends without limits [into eternity]. (AMP)**

உலகத்தின் அனைத்து காரியங்களையும் ஆழ்ந்து தியானியுங்கள்….
கர்த்தரின் அனைத்து வசனங்களையும் ஆழ்ந்து தியானியுங்கள்…..
சங்கீதம் 119:96 வசனம் உங்களில் விசுவாசத்தோடு வளரும். அப்பொழுது
"இது கர்த்தர் உண்டுபண்ணின நாள்; இதிலே களிகூர்ந்து மகிழக்கடவோம்."
என கர்த்தருக்குள் நித்தமும் களிகூற முடியும். ஆமென்.

Please meditate deeply all facts of this world…..
Please meditate deeply all the word of God with Christ…..
Psalm 119:96 word lives in you and grow in you with great faith.
Then you can say for ever….

This *is* the day the LORD has made; We will rejoice and be glad in it. (Psalm 118:24)

Amen.

1 பேதுரு/1 Peter 1:8-9

கிறிஸ்துவை நீங்கள் காணாமலிருந்தும் அவரிடத்தில் அன்புகூருகிறீர்கள்; இப்பொழுது அவரைத் தரிசியாமலிருந்தும் அவரிடத்தில் விசுவாசம் வைத்து, **சொல்லிமுடியாததும்** மகிமையால் நிறைந்ததுமாயிருக்கிற **சந்தோஷமுள்ளவர்களாய்** களிகூர்ந்து,
உங்கள் விசுவாசத்தின் பலனாகிய ஆத்துமரட்சிப்பை **அடைகிறீர்கள்.**

Whom having not seen, ye love; in whom, though now ye see him not, yet believing, ye rejoice with joy unspeakable and full of glory:
**Receiving** the end of your faith, even the salvation of your souls.

Let us Pray

சகல பரிபூரணமும் கிறிஸ்துவுக்குள்ளே வாசமாயிருக்கவும், கிறிஸ்து சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் இயேசுகிறிஸ்து மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் தேவனுக்குப் பிரியமாயிற்று.

For God was pleased to have all his fullness dwell in Christ, and through Christ to reconcile to himself all things, whether things on earth or things in heaven, by making peace through his blood, shed on the cross.

(கொலோசெயர் 1:19-20)